

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 255 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 12 – வெள்ளிக்கிழமை 25 ஏப்ரல் 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 255 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 12 - Friday 25 April 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00


## பல்கலைக் கழகங்களுக்கெல்லாம் பல்கலைக் கழகமாக விளங்கிய

# கலைஞர் பெயரில் கும்பகோணத்தில் பல்கலைக் கழகம்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.4.2025) சட்டமன்றப் பேரவையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் கும்பகோணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.



**சென்னை, ஏப்.25-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் கும்பகோணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வெளியிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கு.செல்வப்பெருந்தகை அவர்கள், ஜி.கே. மணி அவர்கள், சிந்தனைச் செல்வன் அவர்கள், வீ.பி. நாகைமாலி அவர்கள், இராமச்சந்திரன் அவர்கள், டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்கள், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள், ரா. ஈஸ்வரன் அவர்கள், தி. வேல்முருகன் அவர்கள் - பின்னர், அவர்களைத் தொடர்ந்து நம்முடைய அவை முன்னவர் அவர்கள், அதேபோல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆகியோர் விதி எண் 55ஐப் பயன்படுத்தி நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயரால் ஓர் பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டுமென்று தங்களுடைய கருத்துக்களை உணர்வுபூர்வமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

**பள்ளி – கல்லூரிகள் மேலோங்க பாடுபட்ட கலைஞர்!**

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பள்ளிகளாக இருந்தாலும், கல்லூரிகளாக இருந்தாலும், அவையெல்லாம் இன்றைக்கு வளர்ந்து, மேலோங்கி மற்ற மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக, ஏன், உலக அளவிலே இன்றைக்குப் பாராட்டப்படக் கூடிய அளவிற்கு வளர்ந்திருக்கின்றன. நாட்டிலேயே முதல் இடத்திற்கு வந்திருக்கக்கூடிய அந்தக் கல்வி நிலையங்கள் எல்லாம் உருவாவதற்குக் காரணமாகப் பல்வேறு தலைவர்கள் இருந்தாலும், அவர்களிலே முக்கியமான தலைவர்களில் ஒருவராக நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

**எவ்வித தயக்கமுமின்றி அறிவிக்கிறேன்!**

அப்படி கல்வியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டிருக்கக்கூடிய, பல்வேறு திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கு எல்லோரும் இங்கே குறிப்பிட்டிருப்பதைப்போல, பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் பல்கலைக்கழகமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு விரைவில் அவர் பிறந்த ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய கும்பகோணத்திலே (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) - நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, எந்தவிதத் தயக்கமுமின்றி நான் அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

தலைவர் கலைஞர் அவர்களது பெயரில் கும்பகோணத்தில் விரைவில் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்படும் என்ற உறுதியான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) - மீண்டும் சொல்கிறேன்; எந்தவித தயக்கமுமின்றி இதைச் சொல்கிறேன் என்று சொல்லி நான் அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்புக்குப் பதிலளித்து அறிவிப்பினை வெளியிட்டார்.

---

## திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம்

# முரசொலி செல்வம் திருவுருவச் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஏப். 25-**

**சென்னை - முரசொலி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலையை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். 'முரசொலி' இதழில் முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய 'சிலந்தி' கட்டுரைகள் நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.**

அதுபற்றிய விவரம் வருமாறு:-

திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் சிலை திறப்பு மற்றும் 'சிலந்தி' கட்டுரைகள் நூல் வெளியீட்டு விழா நேற்று (24.4.2025 - வியாழன்) மாலை 5 மணியளவில் சென்னை - கோடம்பாக்கம் முரசொலி வளாகத்தில் முரசொலி அறக்கட்டளை நிர்வாகம் சார்பில் நடைபெற்றது.

முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச்சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

முரசொலி செல்வம் அவர்களின் 'சிலந்தி' கட்டுரைகள் நூலை, கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டார்.

முதல் நூலை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டார்.



கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நன்றி கூறினார்.

இந்நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள், மேயர்கள், துணை மேயர்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர். அனைவரும் வருகை தந்து நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

**முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய 'சிலந்தி' கட்டுரைகள் நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'சிலந்தி' என்ற பெயரால் அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய கட்டுரைகள் - அன்று முதல் இன்று வரை நமக்கு மட்டுமல்ல, அரசியல் ஆர்வலர்கள் அனைவருக்கும் பாடமாக அமைந்தது.**

**பொதுவாகச் சிலந்தி வலையைத் தொட்டால் அறுத்துவிடலாம். ஆனால் செல்வம் அண்ணனின் வாதங்கள் நைலான் நரம்பு வலை போலத்தான் இருக்கும். யாராலும் மறுத்து அறுத்துவிட முடியாது. அந்தளவுக்கு வலிமையான வாதங்கள் வன்மையான எழுத்துகளால் வைத்து வந்தார்.**

**தி.மு.க.வைப் பற்றியோ - தலைவர் கலைஞரைப் பற்றியோ - என்னைப் பற்றியோ - ஏதாவது சிறு விமர்சனம் வந்தாலும் உடனடியாக செல்வம் அண்ணன் பேனா வைத் தீட்டி விடுவார். எங்கள் மீது சிறுதுரும்பு விழவும் விடமாட்டார். அந்தளவுக்குக் கழகத்தையும் - எங்களையும் போற்றிப் பாதுகாத்தவர் செல்வம் அண்ணன் அவர்கள். அவர் எழுதிய கட்டுரைகள் அவரைப் போலவே கம்பீரமானவை" எனக் குறிப்பிட்டுள்ளார்.**